www.Padasalai.Net www.CBSEtips.in

V11Bio

விருதுநகர் மாவட்டம்
காலாண்டுப் பொதுத் தேர்வு - 2023

# வகுப்பு 11

## உயிரியல்

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள்: 70

**பகுதி - I (உயிரி - தாவரவியல்)** **மதிப்பெண்கள்: 35**

### பிரிவு - I

குறிப்பு: 1. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **8×1=8**
2. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதற்குரிய குறியீட்டுடன் எழுதவும்.

1) கீழ்கண்டவற்றுள் எது இலையின் உருமாற்றம்
அ) இலைத்தொழில் தண்டு ஆ) குறு இலைத்தொழில் தண்டு
இ) இலைத்தொழில் காம்பு ஈ) தண்டு சுழல் கொடி

2) ஒரு மஞ்சரியில் மலர்கள் பக்கவாட்டில் அடி முதல் நுனி நோக்கிய வரிசையில் அமைத்திருந்தால் இளம்மொட்டு
அ) எங்குமிருக்கும் ஆ) சேய்மையிலிருக்கும்
இ) அண்மையிருக்கும் ஈ) இடைசெருகப்பட்டிருக்கும்

3) **பொருத்துக: (சரியான வரிசையைத் தேர்ந்தெடுக்கவும்)**
i) இனப்பரிணாம வழி வகைப்பாட்டு முறை - a) பெந்தம் & ஹூக்கர்
ii) செயற்கை வகைப்பாட்டு முறை - b) எங்ளர் & பிரான்டில்
iii) இந்திய தாவரவியல் கள ஆய்வு மையம் - c) கரோலஸ் லின்னேயஸ்
iv) இயற்கைமுறை வகைப்பாடு - d) ஜானகி அம்மாள்
அ) i-c, ii-d, iii-b, iv-a ஆ) i-b, ii-c, iii-d, iv-a
இ) i-b, ii-c, iii-a, iv-d ஈ) i-c, ii-b, iii-a, iv-d

4) நீர் ஒரு துருவத்தன்மை கொண்ட மூலக்கூறு ஏனெனில்
அ) அவை ஒரே மாதிரியான மின்சுமை கொண்டது.
ஆ) அதன் ஹைட்ரஜன் சிறிதளவு எதிர்மின்சுமை கொண்டது.
இ) அவை எதிர்மின்சுமை கொண்டது.
ஈ) அவை சமமற்ற மின்சுமை கொண்டது.

5) மறைமுக செல்பகுப்பை கால்சிசின் மூலம் எந்த நிலையில் தடைசெய்யலாம்?
அ) அனாஃபேஸ் ஆ) மெட்டாஃபேஸ் இ) புரோஃபேஸ் ஈ) டீலோஃபேஸ்

6) ஐந்துலக வகைப்பாட்டினை முன்மொழிந்தது யார்?
அ) விட்டாக்கெர் ஆ) அலெக்சோபோலஸ் இ) கோப்லேண்ட் ஈ) எய்ன்ஸ்வொர்த்

7) ஆம்பர் எனும் பொருளை உற்பத்தி செய்வது
அ) டாக்ஸஸ் பிரிபிஃபோலியா ஆ) ஏபிஸ் பால்சாமியா
இ) செட்ரஸ் அட்லாண்டிகா ஈ) பைனிட்டிஸ் சக்ஸினிஃபெரா

8) செல்லின் ஆற்றல் மையம் எனப்படுவது எது?
அ) கணிகங்கள் ஆ) லைசோசோம்கள்
இ) சென்ட்ரியோல்கள் ஈ) மைட்டோகாண்ட்ரியா

### பிரிவு - II

**ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **4×2=8**

9) மீசோசோம்கள் என்றால் என்ன?
10) வேர் ஏறு கொடிகள் எவ்வாறு தண்டு ஏறு கொடிகளிலிருந்து வேறுபடுகின்றன?
11) ஆசிரியர் பெயர் சுட்டம் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தரவும்.
12) புரோட்டோபிளாச கோட்பாட்டைக் கூறுக.
13) சைட்டோகைனசிஸ் என்றால் என்ன?
14) நொதிகள் - வரையறு.

### பிரிவு - III

**ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **3×3=9**
**வினா எண் 19க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

15) பாசிகளில் பசுங்கணிகத்தின் வடிவம் தனித்துவம் வாய்ந்தது எனக் கருதுகிறாயா? உனது விடையை நியாயப்படுத்துக.
16) மெய் சைம் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தரவும்.
17) செல் சுவரின் பணிகள் யாவை?
18) தொற்று வேர்கள் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தரவும்.
19) மைட்டாசிஸ் செல்பகுப்பின் ஏதேனும் மூன்று முக்கியத்துவத்தினை எழுது.

### பிரிவு - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** **2×5=10**

20) அ) வேறுபடுத்து: ஜிம்னோஸ்பெர்ம்கள் மற்றும் ஆஞ்சியோஸ்பெர்ம்கள் **(அல்லது)**
ஆ) அல்லியம் சீபா தாவரத்தை கலைச்சொற்களால் விவரி.
21) அ) பாலிடீன் குரோமோசோமின் அமைப்பை விவரி. **(அல்லது)**
ஆ) DNAவின் அமைப்பை விவரி.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**பகுதி - II (உயிர் - விலங்கியல்)** மதிப்பெண்கள்: 35

**பிரிவு - 1**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 8×1=8

1) கிளாடோகிராம் என்பது கீழ்க்கண்ட பண்புகளைக் கொண்டுள்ளது.
   அ) உடற்செயலியல் மற்றும் உயிர்வேதியியல்
   ஆ) பல்லுயிர்தன்மை மற்றும் இனத்தொடர்பு தொகுப்பமைவு
   இ) பரிணாமப் பண்புகள் மற்றும் மரபுவழிப் பண்புகள்
   ஈ) மேற்குறிப்பிட்ட எதுவுமில்லை
2) எவ்வகை சமச்சீர்தன்மை முதிர்ந்த வயிற்றுக் காலிகளில் (நத்தைகள்) காணப்படுகிறது?
   அ) சமச்சீர்அற்ற தன்மை ஆ) இருபக்க சமச்சீரமைப்பு
   இ) ஆரச்சமச்சீரமைப்பு ஈ) ஐந்தாரச் சமச்சீர் அமைப்பு
3) இணைப்புத் திசுவின் தளப்பொருளில் காணப்படும் நாரிழை யாது?
   அ) ஏரியோலார் ஆ) குழல்வடிவ நாரிழை
   இ) குருத்தெலும்பு ஈ) கொலாஜன்
4) இருபால் உயிரி எது?
   அ) தவளை ஆ) கரப்பான்பூச்சி இ) மண்புழு ஈ) உருளைப்புழு
5) கீழ்வருவனவற்றுள் எது கல்லீரலின் பணியல்ல?
   அ) இன்சுலின் உற்பத்தி ஆ) நச்சுநீக்கம்
   இ) கிளைக்கோஜன் சேமிப்பு ஈ) பித்தநீர் உற்பத்தி
6) உயிர்ப்புத்திறன் என்பது
   அ) மூச்சுக்காற்று அளவு + உட்சுவாச சேமிப்புக் கொள்ளளவு
   ஆ) மூச்சுக்காற்று அளவு + வெளிச்சுவாச சேமிப்புக் கொள்ளளவு
   இ) எஞ்சிய கொள்ளளவு + வெளிச்சுவாச சேமிப்புக் கொள்ளளவு
   ஈ) மூச்சுக்காற்று அளவு + உட்சுவாச சேமிப்புக் கொள்ளளவு + வெளிச்சுவாச சேமிப்புக் கொள்ளளவு
7) இதயத்தில் ‘லப்’ ஒலி இதனால் ஏற்படுகிறது.
   அ) ஆரிக்குலோ வெண்ட்ரிகுலார் வால்வுகள் மூடுவதால்
   ஆ) அரைச்சந்திர வால்வுகள் திறப்பதால்
   இ) அரைச்சந்திர வால்வுகள் மூடுவதால்
   ஈ) ஆரிக்குலோ வெண்ட்ரிகுலோர் வால்வுகள் திறப்பதால்
8) சிறுநீர் உருவாக்கத்திற்கு குறைந்த அளவு நீர்த்தேவையுடைய உயிரிகள்
   அ) யூரியா நீக்கிகள் ஆ) அம்மோனியா நீக்கிகள்
   இ) யூரிக் அமில நீக்கிகள் ஈ) இரசாயன நீக்கிகள்

**பிரிவு - 2**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும்:** 4×2=8

9) சிற்றினக்கோட்பாட்டில் சார்லஸ் டார்வின் பங்கு யாது?
10) திறந்த சுற்றோட்ட மண்டலம் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
11) சிறப்புவகை இணைப்புத்திசுக்கள் எவை?
12) ஆண் தவளை புணர்ச்சிக்காக எவ்வாறு பெண் தவளையைக் கவர்கிறது?
13) பற்களின் வகை மற்றும் பற்சூத்திரம் எழுதுக.
14) நிணநீர் என்றால் என்ன? அதன் பணி யாது?

**பிரிவு - 3**

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும்:** 3×3=9
**வினா எண் 19க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

15) இருவாழ்வியின் லார்வா மற்றும் முதிர் உயிரி வெளியேற்றும் நைட்ரஜன் கழிவுப்பொருட்கள் யாவை?
16) மனிதனின் நான்கு இரத்தவகைகளில் காணப்படும் அக்ளுட்டினோஜன் (ஆன்டிஜன்) மற்றும் அக்ளுடினின்களை (ஆன்டிபாடி) எழுதுக.
17) உணவு விழுங்கும்போது எந்த அமைப்பு மூச்சுக்குழலின் திறப்பை மூடி பாதுகாக்கிறது. இந்த அமைப்பு எங்கு காணப்படுகிறது?
18) பித்தநீரில் செரிமான நொதிகள் இல்லை, இருந்தும் செரித்தலில் முக்கியத்துவம் பெறுகிறது ஏன்?
19) கரப்பான்பூச்சி ஏன் நோய் கடத்திகள் என்று அழைக்கப்படுகின்றது?

**பிரிவு - 4**

**பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்:** 2×5=10

20) அறிவியல் பெயரிடுவதற்கான அடிப்படை விதிகள் யாவை? **(அல்லது)** எபிதீலியம் என்றால் என்ன? எவையேனும் நான்கு வகை எபிதீலியத்தின் பண்புகளைத் தருக.
21) உட்சுவாசம் மற்றும் வெளிச்சுவாசத்தில் நடைபெறும் நிகழ்வுகள் யாவை? **(அல்லது)** இதயத்துடிப்பு தோன்றல் மற்றும் கட்டுப்படுத்துதல் நடைபெறும் முறையை விவரி.

----------

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com